**சவுதி நிதியளிக்கப்பட்ட வீதி வலையமைப்பு அபிவிருத்திச் செயற்திட்டம் - 2013**

வீதி வலையமைப்பு அபிவிருத்திச் செயற்திட்டத்தின் 2013 யூன் 03 இலிருந்து திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்கீட்டுக் காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்திற்கும் (ஜீஓஎஸ்எல்) அபிவிருத்திக்கான சவுதி நிதியத்திற்கும் (எஸ்எவ்டி) இடையில் கைசாத்திடப்பட்ட 2012 ஒத்தோபர் 30 ஆந் திகதிய 9/574 ஆம் இலக்க கடனின் கீழ் இச் செயற்திட்டம் அமுலாக்கப்படுகின்றது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்குதி**

வீதி வலையமைப்பு அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் படி, வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது (ஆர்டிஏ) செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. மத்திய, கிழக்கு, சபரகமுவ, மேல் மற்றும் வட மேல் மாகாணங்களில் மொத்தம் 138.39 கிமீ நீளமான ஒன்பது வீதிப் பிரிவுகளை புனரமைத்து முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 10,628 மில்லியனானதுடன் அதில் யூ.எஸ்.டொலர் 60 மில்லியனிற்கு சமமான ரூபா 7,800 மில்லின் அபிவிருத்திக்கான சவுதி நிதியத்தால் நிதியளிக்க வேண்டுதென உடன்பாடு காணப்பட்டது. விபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| கொடையாளிக்கும் முகவர் | உடன்பட்ட தொகை | | மதிப்பிடப்பட்டவற்றின் சதவீதம் |
|---|---|---|---|
| | யூ.எஸ்.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | |
| அபிவிருத்திக்கான சவுதி நிதியம் | 60 | 7,800.00 | 73 |
| இலங்கை அரசாங்கம் | - | 2,828.41 | 27 |
| மொத்தம் | 60 | 10,628.41 | |

செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2013 யூன் 03 தொடங்கியிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 இற்கு முன்னர் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

**1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும்

செவ்வைபார்த்தல்களினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், மற்றும் நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப் பட்டிருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

-------------------

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2013 திசெம்பர் 31 இல்

உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4 நிதிக் கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, 2013 யூன் 03 முதல் திசெம்பர் 31 வரையான முதலாவது கணக்கீட்டுக் காலப்பகுதிக்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா 1,247 மில்லியனாக இருந்தது. மீளாய்வாண்டிற்கான செலவினத்தின் பொழிப்பைக் பின்வரும் கூற்று காட்டுகிறது.

| செலவின வகுதி | 2013 யூன் 03 முதல் திசெம்பர் 31 வரையான முதலாவது கணக்கீட்டுக் காலப்பகுதிக்கான செலவினம் |
|---|---|
| | ரூபா |
| நடைபெறும் வேலை | 509,999,448 |
| பெறவேண்டியவைகள் | 89,431 |
| | 510,088,879 |

## 5. கணக்காய்வு அவதானிப்புகள்

### 5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட கடன் பெறுகைகள் கடனளிக்கும் முகவரால் செய்யப்பட்ட நேரடிக் கொடுப்பனவுகள் கணக்கிடப்படாமை காரணமாக ரூபா 417,365,257 ஆல் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. மேலும், ரூபா 6,956,719 தொகையான வெளிநாட்டு நாணயமாற்று நட்டம் மேற்குறிப்பிட்ட தவறு காரணமாகவும் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வேறு செயற்திட்டத்திலிருந்து இச்செயற்திட்டத்திற்கு மாற்றப்பட்டிருந்த ரூபா 796,700 பெறுமதியான கணனிகள் மற்றும் உபபாகங்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், சொல்லப்பட்ட சொத்துக்களின் பௌதீக

உள்ளதன்மையை மெய்மையாய்வு செய்வதற்கு கணிப்பீட்டுச் சபை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 6. நிதி மற்றும் செய்றபாட்டு மீளாய்வு

### 6.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் மீளாய்வாண்டின் போதான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கடன் உடன்படிக்கைகளில் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | 2013 திசெம்பர் 31 வரை பயன்படுத்திய நிதிகள் | |
|---|---|---|---|---|---|
| | யூ.எஸ். டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | % |
| அபிவிருத்திக்கான சவுதி நிதியம் | 60 | 7,800** | 386.673 | 386.673 | 4.96 |
| இலங்கை அரசாங்கம் | - | 2,828 | 88.373 | 39.343 | 1.39 |
| மொத்தம் | 60 | 10,628 | 475.046 | *426.016 | |

* இன்னமும் கோரவேண்டியிருந்த அட்டுறு செலவினம், பிடிகாசு மற்றும் இடைகால நடைமுறைகணக்கு கொடுக்கல் வாங்கல்கள் தவிர்த்தமை காரணமாக இந்த அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் காட்டப்பட்ட தொகையிலிருந்து இந்த தொகை வேறுபடுகிறது.

** 2012 ஒக்தோபர் 30 இல் நிலவிய ஒரு யூஎஸ்.டொலரிற்கு ரூபா 130 வீதத்தில் உடன்பட்ட கடன் தொகை மாற்றப்பட்டிருந்தது.

### 6.2 பௌதீக செயலாற்றல்

2012 சனவரி 12 இல் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், இச் செயற்திட்டத்தின் கீழ் 144 கிலோமீற்றர்கள் புனரமைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், கிரய மதிப்பீடுகள் 09 வீதிகளின் 138.39 கிலோமீற்றர்களை புனரமைப்பதற்கே தயாரிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டமானது மீளாய்வாண்டின் போது ஐந்து வீதிகளின் 57.68 கிலோமீற்றர்களை புனரமைப்பதற்கு ஒப்பந்தங்கள் வழங்கியிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அத்தகைய வீதிகள் புனரமைப்பின் பௌதீக முன்னேற்றம் கீழே தரப்படுகின்றன.

| வீதியின் பெயர் | தூரம் | பூர்த்தியாக்கலிற்காக பட்டியலிடப்பட்ட திகதி | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பௌதீக முன்னேற்றம் | |
|---|---|---|---|---|
| | | | இலக்கு | உள்ளபடி |
| | (கிமீ) | | % | % |
| யாழ்ப்பாணம் - கண்டி வீதி (ஏ-09) கடுகஸ்தோட்டை முதல் | 10.97 | 2014 யூன் 02 | 46.63 | 11.23 |

| | | | | |
|---|---|---|---|---|
| அலவத்துகொடை | | | | |
| யாழ்ப்பாணம் - கண்டி வீதி (ஏ-09) அலவத்துகொடை முதல் பலபத்வெல | 16.97 | 2014 யூன் 02 | 44.45 | 12.61 |
| தம்பலகாமம்- கின்னியா வீதி (பீ541) தம்பலகாமம் முதல் சூரங்கை | 8.50 | 2014 திசெம்பர் 06 | 16.7 | 6.96 |
| தெகியோவிட்ட- தெரனியகல – நூறி வீதி (பீ093) தெகியோவிட்ட முதல் தெரனியகல | 14.00 | 2014 திசெம்பர் 04 | 11.94 | 7.41 |
| கொழும்பு –கண்டி வீதி (ஏ-01) பேலியகொடை- கிரிபத்கொடை | 7.24 | 2013 திசெம்பர் 12 | 0.11 | 0.10 |

## 6.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பரிமாணம் ii இன் 103.4 ஆம் ஒப்பந்த நிபந்தனையின் குறிப்பான குறிப்புரைகளிற்கமைய ஒப்பந்தகாரர் நிர்மாண காலத்தின் போது வீதி பாதுகாப்பு அளவீடுகளை பேணுவதற்கு பொறுப்பாகும். வேலைத்தள குறிப்புரைகளின் பிரகாரம், தெகியோவிட்ட- தெரனியகல – நூறி வீதியின் போக்குவரத்து முகாமைத்துவம் திருப்பியற்றிருந்தது. வீதிப் பானையாளர்களின் பாதுகாப்பை உறுதிப்டுத்துவதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களுடன் உடன்படுவதற்கு செயற்திட்டத்தின் வதிவிடப் பொறியியலாளரால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், செயற்திட்டத்தால் விருத்திசெய்யப்பட்ட சுகாதார, பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் முகாமைத்துவக் கொள்கை என்பவற்றுக்கமைய, ஒப்பந்தகாரர், சுற்றுப்புறக் காணி உடமையாளர்கள் மற்றும் வீதிப் பாவனையாளர்கள் என்போரின் இடையூறுகளைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு வேண்டியிருந்தார். தெகியோவிட்ட- தெரனியகல – நூறி வீதியின் தூசு புகையை கட்டுப்படுத்தவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை போதாதிருந்தமை வேலைத்தள கூட்டக்குறிப்புகளில் வெளிப்பட்டது.

(ஆ) அளவீட்டுப் பட்டியில் எதுவும் இல்லாதிருந்த போதிலும் தெகியோவிட்ட- தெரனியகல – நூறி வீதியிற்கான சுற்றுப்புற அடையாளங்களை வழங்குவதற்கு ரூபா 1,421,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 6.4 பயனற்ற கொடுக்கல் வாங்கல்கள்

ஒப்பந்த நிபந்தனையின் 4.2 மற்றும் 14.2 ஆம் ஆம் உட்பிரிவின் பிரகாரம், முற்பணக் கொடுப்பனவின் முதலாவது தவணைப்பணம் ஏற்பனவு கடிதம் வழங்கியபின்னர் 42 நாட்களிற்குள் அல்லது இறுதியாக ஆவணங்கள் எதுவாகினும் பெற்றபின்னர் 21 நாட்களிற்குள் ஒப்பந்தகாரருக்கு செலுத்த வேண்டும். எவ்வாறாயினும், முற்பணங்கள் உரிய திகதியில் விடுவிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே, செயற்திட்டமானது வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அனுமதி இல்லாமல் ஒப்பந்தகாரருக்கு வட்டியாக ரூபா 13,060,861 தொகை செலுத்த வேண்டியிருந்தது. விபரங்கள் பின்வருமாறுள்ளன.

| ஒப்பந்தம் | ஐபிசீ இலக்கம் | செலுத்திய வட்டி |
| --- | --- | --- |
| | | ரூபா |
| தெகியோவிட்ட- தெரனியகல – நூறி வீதி (0+000 முதல் 14+000 கிலோமீற்றர்கள்) | 03 | 2,642,452 |
| தம்பலகாமம்- கின்னியா வீதி (0+000 முதல் 8+500 கிலோமீற்றர்கள்) | 06 | 2,079,435 |
| கொழும்பு –கண்டி வீதி (4+600 முதல் 15+570 கிலோமீற்றர்கள்) | 02 | 3,929,788 |
| கொழும்பு –கண்டி வீதி (15+570 முதல் 32+540 கிலோமீற்றர்கள்) | 02 | 4,409,186 |
| | | 13,060,861 |

## 6.5 மனித வள முகாமைத்துவம்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய டிஎம்எஸ் 33 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைய செயற்திட்ட கண்காணிப்பு பிரிவிற்காக 09 உத்தியோகத்தர்களும் செயற்திட்ட ஒருங்கிணைப்பு பிரிவிற்காக 02 உத்தியோகத்தர்களும் சேர்த்தமைக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.